**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>எம்.சி.ஓ.பி.எண் 728/2016</u>**
**<u>நாள் 08/04/2026 புதன்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – ரேனுகா (PW1) | க/பெயர் – கிருஷ்ணன் |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

1. இந்த மனு என் கணவரால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். என் கணவருக்கு எப்போது விபத்து ஏற்பட்டது என்றால் 14.01.2016 தேதியன்று நடந்தது. எனக்கு எவ்வளவு குழந்தைகள் என்றால் ஒரு மகன், மற்றும் ஒரு மகள் ஆவர்கள். என் கணவர் விபத்து நடந்து 3 வருடங்கள் கழித்து தான் இறந்தார் என்றால் சரிதான். என் மகன் உமாசங்கர் எப்போது இறந்தார் என்றால் 03.07.2023 தேதியன்று இறந்தார். 3ம் மனுதாரர் விஜயலட்சுமி என்பவருக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் சுமார் 35 வருடங்களுக்கு முன்னர் நடந்தது. அவர் திருமணம் ஆனதில் இருந்து அவருடைய கணவர் வீட்டில் தான் உள்ளார் என்றால் சரிதான். 4ம் மனுதாரர் உமாசங்கருக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் நடந்தது. அவருடைய மனைவி பெயர் வசந்தா. அவர்களுக்கு இரு மகள்கள் உள்ளனர். அவர்களின் பெயர் பேரரசி மற்றும் காயத்திரி ஆகும்.

2. நடந்த விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

எந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்துக்கொண்டேன் என்றால் பைக் மோதி விபத்து ஏற்பட்டது. என் கணவர் எவ்வளவு நாட்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார் என்றால் சுமார் 10 நாட்கள் இருந்தார். 23.01.2016 முதல் 23.11.2019 வரையிலான தொடார் சிகிச்சை மற்றும் மருத்துவ செலவுகள் குறித்த ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மருத்துவ செலவு எவ்வளவு ஆனது என்றால் சுமார் 1,50,000/– ஆனது. மேற்படி விபத்து என்னுடைய கணவரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் கணவர் இறந்துவிட்டதால் நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ரசீதுகளுக்கு உண்டான இழப்பீடு மட்டும் தான் பெற முடியும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**